WWW.TAMILMIXEREDUCATION.COM

தினமலர்

# TNPSC Group 4 தேர்வு
# மாதிரி வினா-விடை

## பொதுத்தமிழ் (இலக்கியம்)

1. கூற்றுகளை ஆராய்க (மலைப்படுகடாம்)
   I. மலைப்படுகடாம் நூலின் பாட்டுடைத் தலைவன் குறுநிலமன்னன் நன்னன்
   II. 583 அடிகளைக் கொண்டது
   III. மலையை யானையாக பாவித்து மதயானை எழுப்பும் பலவகை ஓசைகளை இது விளக்குகிறது
   IV. பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடியது மலைப்படுகடாம்
   (A) அனைத்தும் சரி (B) II, III, IV சரி
   (C) I, III, IV சரி (D) I, II, IV சரி III தவறு
2. சதாவதானம் என்றால் என்ன
   (A) விளையாட்டில் சதம் அடித்தல்
   (B) 100 வகையான தானங்களைச் செய்தல்
   (C) 100 அவதாரங்கள் எடுத்துள்ள இறைவன்
   (D) ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் 100 செயல்களையும் நினைவில் கொண்டு ஒருவர் விடையளித்தல்
3. பொருந்தாத இணையைச் சுட்டுக
   (A) கம்பன் பிறந்த ஊர் – தேரெழுந்தூர்
   (B) கம்பரை ஆதரித்த வள்ளல் – சடையப்பர்
   (C) கம்பர் எழுதிய நூல் – சடகோபர் அந்தாதி, சரஸ்வதி அந்தாதி
   (D) ராமாயணத்திற்கு கம்பன் இட்ட பெயர் – கம்பராமாயணம்
4. 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்' என்றவர்
   (A) சீத்தலைச் சாத்தனார்
   (B) இளங்கோவடிகள்
   (C) சேரன் செங்குட்டுவன்
   (D) பாண்டியன் நெடுஞ்செழியன்
5. கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய நரம்பின் முடிமுதிர் பரதவர் – இடம்பெறும் நூல்
   (A) நற்றிணை (B) பதிற்றுப்பத்து
   (C) கார்நாற்பது (D) களவழி நாற்பது
6. தேசம் உடுத்திய நூலாடை எனக் குறிப்பிடும் நூல்
   (A) திருவாசகம் (B) திருக்குறள்
   (C) திரிகடுகம் (D) திருப்பாவை
7. 'பரணிக்கோர் செயங்கொண்டார்' எனப் பாடியவர்
   (A) ஒட்டக்கூத்தர் (B) புலவர் புகழேந்தி
   (C) பலபட்டடை சொக்கநாதப்புலவர்
   (D) கருணாகரத் தொண்டைமான்
8. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே ——
   (A) கட்டளைக்கல்
   (B) ஆராய்ந்து அறியும் கல்
   (C) உரைகல் (D) செயல்பாடுகள்
9. "இருண்ட கால இலக்கியம்" என அழைக்கப்படுவது.
   (A) பத்துப்பாட்டு (B) எட்டுத்தொகை
   (C) சமய இலக்கியம்
   (D) பதினெண் கீழ்க்கணக்கு
10. நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை, மாறு ஏற்றச் சினைப்பவை, மண்டிப் பாய்பவையாய்" என காளைகள் குறித்துக் கூறும் நூல்
    (A) புறநானூறு (B) கலித்தொகை
    (C) சிலப்பதிகாரம்
    (D) புறப்பொருள் வெண்பாமாலை
11. சரியற்ற இணை எது
    (A) 1, 2, 3ம் திருமுறைகள் – திருஞானசம்பந்தர்
    (B) 8ம் திருமுறை – சுந்தரர்
    (C) 10ம் திருமுறை – திருமூலர்
    (D) 12ம் திருமுறை – சேக்கிழார்
12 "யாண்டு உளன் ஆயினும் அறியேன் ஓரும் புலிசேர்ந்து போகிய கல்அளை போல" – இவ்வரிகள் இடம் பெற்ற நூல்
    (A) குறுந்தொகை (B) புறநானூறு
    (C) அகநானூறு (D) பரிபாடல்
13. "வேளாண் வேதம்" என அழைக்கப்படும் நூல்
    (A) நாலடியார் (B) திருக்குறள்
    (C) முக்கூடற்பள்ளு (D) முல்லைக்காஞ்சி
14. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் முதல் திருவந்தாதி பாடியவர்
    (A) பொய்கையாழ்வார் (B) பூதத்தாழ்வார்
    (C) பெரியாழ்வார் (D) பேயாழ்வார்
15. "செயங்கொண்டார்" யாருடைய அவைக்களப் புலவராக இருந்தார்
    (A) முதலாம் குலோத்துங்க சோழன்
    (B) இரண்டாம் குலோத்துங்க சோழன்
    (C) நரசிம்மவர்மன் (D) ராஜராஜன்
16. "உளம்தொட்டு உழுவால் ஆக்கி வளம்தொட்டுப் பாகுபடும் கிணற்றோடு' என்று இவ்வைம் பாற்படுத்தான்" என்ற பாடலடி இடம்பெற்ற நூல்
    (A) குறுந்தொகை (B) புறநானூறு
    (C) சிறுபஞ்சமூலம் (D) திரிகடுகம்
17. ராவண காவியம் காலத்தின் விளைவு ஆராய்ச்சியின் அறிகுறி புரட்சிப்பொறி உண்மையை உணர வைக்கும் உன்னத நூல் எனக் கூறியவர்
    (A) பெரியார் (B) அண்ணாதுரை
    (C) பிச்சமூர்த்தி (D) கண்ணதாசன்

**விடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. A | 2. D | 3. D | 4. B | 5. A | 6. B | 7. C |
| 8. A | 9. D | 10. B | 11. B | 12. B | 13. A | 14. A |
| 15. A | 16. C | 17. B | | | | |

தினமும் தொடரும் – 9



TNPSC Group-IV & VAO தேர்வு வழிகாட்டி புத்தகம் பெற
1800 425 7700 ( Toll Free ) 75500 09565 ( Whatsapp ) ( காலை 7:00 - இரவு 7:00 மணி )
256 பக்கம் ரூ. 300